திரு. பூரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருமலை நாய்க்கரின் 400-வது பிறந்த நாள் விழாவை அரசு மிகச் சிறப்பாக நடத்த இருக்கிறது. அந்த விழாவிற்கான ஊர்வலம் அந்த சிவன் கோவிலில் இருந்துதான் ஆரம்பிக்க இருக்கிறது. ஆகவே, அந்த பிறந்த தின விழாவை முன்னிட்டு, அங்கே திருப்பணி வேலைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அங்கே கம்பிவலை போட்டு பாதுகாக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்களின் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே அது தூசு படிந்து இருக்கிறது. அந்த சிலையின், மீது அந்த இடத்தைப் பெருக்குவதற்காக வைத்துள்ள விளக்குமாறை வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ளது தவறான தகவல் என்று சொல்லிக்கொண்டு, அந்தக் கோவிலுக்குச் செல்பவர்களின் மனதில் எந்தவிதமான கெட்ட எண்ணமும் எழாதவண்ணம் அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னிடத்தில் தரப்பட்டுள்ள குறிப்பின்படி அது நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது? ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படியில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியாக இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்குத் தகுந்த பாதுகாப்புத் தந்து, அந்தப் பணியை முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 400-வது ஆண்டு விழா பற்றி சொன்னார்கள். திருப்பணி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக அமைக்கப்பட்டுள்ள விழாக் கமிட்டியினர் பல வேண்டுகோளை அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த வேண்டுகோள்களில் அரசு எதையெதை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு எடுக்கிறதோ, அந்தந்த முடிவுகளின் அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

5. அறிக்கை அளித்தல்.

உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, ‘ வணிக ஒற்றுமை ’ திங்களிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.